# PRIMARY SCHOOL
# CONTINUAL ASSESSMENT 1
# PRIMARY 5 STANDARD
# TAMIL LANGUAGE
# PAPER 2

## BOOKLET A

Name : ______________________________ (        )

Class : Primary 5 ____________________

Date : ______________

Name of Tamil Teacher: __________________________

Total Time for Booklets A and B: 1 hour 40 minutes

INSTRUCTIONS TO CANDIDATES

1. Do not turn over this page until you are told to do so.
2. Follow all instructions carefully.
3. Answer all questions.
4. Shade your answers in the Optical Answer Sheet (OAS) provided.

69

www.testpapersfree.com

P5

<u>தொடக்கப் பள்ளி</u>


## ஐந்தாம் வகுப்பு - கட்டுரை - 5

பெயர் : ____________ தேதி : ________

வகுப்பு : 5 - ____

பின்வரும் படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு, **100 சொற்களுக்குக் குறையாமல்** ஒரு கட்டுரை / கதை எழுது. படத்தொடரின் அடியில் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களையும் சொற்றொடர்களையும் நீ இந்தக் கட்டுரை / கதை எழுதுவதற்கு உதவியாகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

1. தபால்காரரர்
2. வீடு வீடாகச் சென்று
3. இரும்புக் கதவை
4. கயிற்றை அறுத்துக்கொண்டு
5. பாய்ந்தது
6. கையைக் கடித்தது
7. கூச்சலிட்டார்
8. கம்புடன் ஓடிவந்தார்
9. வீட்டிற்குள் விரட்டினார்
10. மன்னிப்புக் கேட்டார்
11. மருந்தகத்தில்
12. சிகிச்சை




70

Q1 *முதல்* Q23 *வரையுள்ள வினாக்களுக்கு* OAS *விடைத்தாளில், சரியான விடையின் எண்ணுள்ள* (1, 2, 3 *அல்லது* 4) *நீள்வட்டத்தை நிழலிடு.*

*'அ ' பிரிவு*

**A1 வேற்றுமை**

Q1 முதல் Q6 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான ***வேற்றுமை உருபு*** ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (12 மதிப்பெண்கள்)

கூண்டுக்குள் அடைப்பட்டு இருந்த பெண் புறா ஒன்று முட்டைகள் இட்டது. _____(1)____ குஞ்சுகள் வெளியாயின. புறாவிற்கு மகிழ்ச்சி தாங்க முடியவில்லை. "_____(2)____ நான்கு குஞ்சுகள் பிறந்துள்ளன. என் குடும்பம் பெருகுகிறது," என்று அது ____(3)____ கூவியது. அவ்வழியாகப் பறந்து சென்ற காகம் ஒன்று ____(4)____ கேட்டது. அது ____(5)____ அருகே சென்றது. " ஏ! புறாவே! நீயோ ____(6)____ அடைப்பட்டு அடிமை வாழ்க்கை வாழ்கிறாய். உன் குஞ்சுகளும் அவ்வாறே வாழப் போகின்றன. இதற்காகவா மகிழ்கிறாய்," என்று கேட்டது. புறா சோகத்தில் தலை கவிழ்ந்தது.

Q1. (1) முட்டைகளின்
(2) முட்டைகளை
(3) முட்டைகளிலிருந்து
(4) முட்டைகளுக்கு

( )

Q2. (1) என்னுடன்
(2) என்னுடைய
(3) எனக்கு
(4) என்னிடம்

( )

Q3. (1) மகிழ்ச்சியுடன்
(2) மகிழ்ச்சியின்
(3) மகிழ்ச்சியை
(4) மகிழ்ச்சிக்கு

( )

Q4. (1) இதனிடம்
(2) இதனுடன்
(3) இதற்கு
(4) இதை

( )

Q5. (1) புறாவுடன்
(2) புறாவின்
(3) புறாவிடம்
(4) புறாவை

( )

Q6. (1) கூண்டில்
(2) கூண்டிலிருந்து
(3) கூண்டை
(4) கூண்டோடு

( )



P5/CA1/P5

www.testpapersfree.com

A2 செய்யுள் / பழமொழி

Q7 முதல் Q12 வரையுள்ள *செய்யுள் / பழமொழியை* நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(12 மதிப்பெண்கள்)

Q7. எண்ணும் ________________ கண்ணெனத் தகும்.

(1) சொல்லும்
(2) எழுத்தும்
(3) கணிதமும்
(4) கல்வியும்

( )

Q8. உண்டிக்கு அழகு ________________ உண்டல்.

(1) குடும்பத்தோடு
(2) நண்பரோடு
(3) உறவினரோடு
(4) விருந்தோடு

( )

Q9. ஊக்கமது ________________ .

(1) மறவேல்
(2) ஒழியேல்
(3) கைவிடேல்
(4) இகழேல்

( )

Q10. அடக்கம் ஆயிரம் ________________ தரும்.

(1) பொன்
(2) பொருள்
(3) நன்மை
(4) செல்வம்

( )

Q11. மகன்தந்தைக்கு ஆற்றும் ________________ இவன்தந்தை
என்நோற்றான் கொல்எனுஞ் சொல்.

(1) பணி
(2) நன்றி
(3) உதவி
(4) செயல்

( )

Q12. ________________ ஆகாததும் ஆகும்.

(1) பண்பிருந்தால்
(2) அன்பிருந்தால்
(3) பணமிருந்தால்
(4) பணிவிருந்தால்

( )



72

www.testpapersfree.com

## B3 தெரிவுவிடைக் கருத்தறிதல்

*பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி:*

முதியவர் ஒருவர் ஊர் ஊராகச் சென்று மக்களுக்குத் தொண்டு செய்து வந்தார். ஒரு நாள் இரவு அவர் தங்குவதற்கு இடமில்லாமல் திரிந்துகொண்டிருந்தார். அப்போது ஒரு பணக்காரியிடம் அவர் வீட்டில் ஒரு நாள் இரவு மட்டும் தங்க அனுமதி கேட்டார். அவள் முதியவரைப் பிச்சைக்காரன் என்று நினைத்து, "என் வீட்டில் இடமும் உணவும் இல்லை; போய்விடு," என்று விரட்டினாள்.

பக்கத்துக் குடிசையில் வாழ்ந்த மாதவி அவர்மேல் இரக்கங்கொண்டு அவரை வரவேற்று உபசரித்தாள். மறுநாள் காலை அம்முதியவர், "பெண்ணே! நீ காலையில் முதன் முதலில் செய்யத் தொடங்கும் வேலை மாலைவரை தொடர்ந்து நடந்துகொண்டே இருக்கும்," என்று மாதவியிடம் கூறிவிட்டுச் சென்றார்.

அன்று மாதவி புதிய சட்டை தைக்கப் புதுத்துணியை அளக்க ஆரம்பித்தாள். அவ்வளவுதான்! அளக்க அளக்கப் புதுத்துணி வந்துகொண்டே இருந்தது. மாலைக்குள் துணி மலைபோல் குவிந்துவிட்டது. துணியை விற்றுப் பணம் <u>ஈட்டலாம்</u> என்று மகிழ்ந்தாள் மாதவி. இதைப்பற்றி கேள்விப்பட்ட பணக்காரிக்கு மாதவியின்மேல் பொறாமை ஏற்பட்டது.

உடனே தன் வீட்டு வண்டிக்காரனிடம் முதியவரை அழைத்துவர உத்தரவிட்டாள். அவன் அவரைக் கண்டுபிடித்துத் தன்னுடன் வருமாறு <u>வற்புறுத்தி</u> அழைத்தபோது அவர் செல்ல மறுத்துவிட்டார். அவர் வராவிட்டால் கோபக்காரியான பணக்காரி தன்னை வேலையைவிட்டு விரட்டிவிடுவாள் என்றான் வண்டிக்காரன். அவன்மேல் இரக்கம் கொண்ட முதியவர் அவனுடன் சென்றார்.

பணக்காரி அவரை வரவேற்று உபசரித்தாள். மறுநாள் காலை முதியவர் கிளம்பும் முன் மாதவியிடம் சொன்னதையே அவளிடமும் கூறினார். அவ்வளவுதான்! பணக்காரி உடனே அளவுகோலை எடுத்துக்கொண்டு புதுத்துணி இருந்த அறைக்கு ஓடினாள். அப்போது அவள் வீட்டுக் கோழி ஒன்று ஓடிவந்து அவளுடைய கால்களில் <u>சிக்கியது</u>. சினத்துடன் அளவுகோலை ஓங்கிக்கொண்டு கோழியை அடிக்க அதைத் துரத்திக்கொண்டு வீடு முழுவதும் ஓடினாள். முதியவர் கூறியது போலவே இரவுவரை கோழியைத் துரத்தி ஓடிக்கொண்டிருந்தாள். அதிகமாக ஆசைப்பட்டவளுக்குச் சரியான தண்டனை கிடைத்தது.



73

www.testpapersfree.com

Q13 முதல் Q17 வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு. (10 மதிப்பெண்கள்)

Q13. பணக்காரி ஏன் முதியவரை விரட்டினாள் ?

(1) அவள் வீட்டில் தங்க இடமில்லாததால்
(2) அவள் வீட்டில் உணவு இல்லாததால்
(3) அவள் முதியவரைப் பிச்சைக்காரன் என்று எண்ணியதால்
(4) அது இரவு நேரம் என்பதால்

( )

Q14. முதியவர் மாதவியிடம் என்ன கூறிவிட்டுச் சென்றார் ?

(1) அவள் காலையிலே வேலையைத் தொடங்கவேண்டும் என்று
(2) அவள் அன்று முதன்முதலில் செய்யும் வேலை மாலை வரை தொடரும் என்று
(3) அவள் காலை முதல் மாலைவரை வேலை செய்யவேண்டும் என்று
(4) அவள் வீட்டில் வேலைகள் காலை முதல் மாலைவரை தொடர்ந்து நடந்துகொண்டு இருக்கும் என்று

( )

Q15. பணக்காரி முதியவரைத் தன் வீட்டுக்கு அழைத்ததன் நோக்கம் என்ன?

(1) மாதவியின்மீது பொறாமை கொண்டதால்
(2) அவரைத் தன் வீட்டில் தங்க வைக்க விரும்பியதால்
(3) முதியவர் பிச்சைக்காரன் அல்ல என்று உணர்ந்ததால்
(4) அதிகப் பணம் ஈட்ட விரும்பியதால்

( )

Q16. முதியவர் எதனால் பணக்காரியின் வீட்டிற்குச் செல்ல சம்மதித்தார்?

(1) வண்டிக்காரன் வற்புறுத்திக் கூப்பிட்டதால்
(2) பணக்காரி வரச்சொல்லி உத்தரவிட்டதால்
(3) அவர் வண்டிக்காரன்மீது அனுதாபம் கொண்டதால்
(4) பணக்காரி தன்மீது கோபப்படுவாள் என்பதால்

( )

Q17. இக்கதைக்கு மிகப் பொருத்தமான தலைப்பு எது?

(1) பேராசை பெரு நஷ்டம்.
(2) ஏழைக்கு உதவுவதால் ஏற்படும் நன்மை.
(3) முதியவர்களைப் பேண்.
(4) எல்லோரிடமும் அன்பு காட்டு.

( )

## B4 சொற்பொருள்

Q18 முதல் Q20 வரையுள்ள சொற்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியில் இடம்பெற்றவை. அவற்றின் *பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.* அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

Q18. ஈட்டலாம்

(1) பெறலாம்
(2) சம்பாதிக்கலாம்
(3) சேமிக்கலாம்
(4) உண்டாக்கலாம்

( )

Q19. வற்புறுத்தி

(1) மிரட்டி
(2) பணிந்து
(3) கட்டாயப்படுத்தி
(4) வேண்டி

( )

Q20. சிக்கியது

(1) மாட்டியது
(2) கொத்தியது
(3) விழுந்தது
(4) தடுக்கியது

( )




75

www.testpapersfree.com

**C5 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்**

பின்வரும் விளம்பரத்தைக் கருத்தூன்றிப் படி :



## ராயல் சொகுசுக் கப்பல் பயணம்
## 108 சுலைமான் தெரு
## சிங்கப்பூர் 281108

வசதி நிறைந்த அறைகள்

சுவையான உணவு

தரமான சேவை



**சிறப்பு அம்சங்கள்**



- தம்பதியருக்கு 10% கழிவு கட்டணம்.
- சிறுவர்களுக்கு கேளிக்கை நிகழ்ச்சிகள்
- இலவச கலைநிகழ்ச்சிகள்
- குழந்தை பராமரிப்பு சேவை
- ஒரே பயணத்தில் பினாங்கு, லங்காவி, கோலாலம்பூர் ஆகிய மூன்று நகரங்களுக்கும் செல்ல அரிய வாய்ப்பு ( மார்ச் மாதம் மட்டுமே)

4 நாள் பயணக் கட்டணம் $400

***விடுமுறை காலச் சிறப்புக கட்டணம்***

பெரியவர் - $375

சிறுவர் - $250 (1 முதல் 10 வயது வரை)

முதியவர் - $200 (60 வயதுக்கும் மேற்பட்டவர் )

இந்த விளம்பரத்துடன் மார்ச் 10ஆம் தேதிக்குள் எங்கள் நிறுவனத்திற்கு வாருங்கள்; பயணத்திற்கான பணத்தைச் செலுத்துங்கள்; உங்களுக்கு ஒரு இலவச பணப்பை காத்துக்கொண்டிருக்கிறது! ஏமாற்றத்தைத் தடுக்க தொலைபேசி எண் 62862861 மூலம் முன்பதிவு செய்யுங்கள்.



76

www.testpapersfree.com

Q21 முதல் Q23 வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக் கொண்டு அமைந்துள்ளன. ***ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு***. அதன் பின்னர், OAS விடைத்தாளில், அந்த விடையின் எண்ணுள்ள நீள்வட்டத்தை நிழலிடு.
(6 மதிப்பெண்கள்)

Q21. மார்ச் மாதம் பயணம் செய்வோருக்கான சிறப்புச் சலுகை என்ன ?

(1) வசதி நிறைந்த அறைகள்

(2) தம்பதியருக்கு 10% கட்டணக்கழிவு வழங்கப்படும்

(3) ஒரே பயணத்தில் மூன்று இடங்களுக்குச் செல்லும் வாய்ப்பு

(4) இலவச கலைநிகழ்ச்சி

( )

Q22. 52 வயதுள்ள ஒருவர் விடுமுறை காலப் பயணத்திற்கு எவ்வளவு கட்டணம் செலுத்தவேண்டும்?

(1) $400

(2) $375

(3) $250

(4) $200

( )

Q23. யாருக்கு இலவசப் பயணப்பை வழங்கப்படும்?

(1) மார்ச் மாதம் நிறுவனத்தில் பணம் செலுத்தும் அனைவருக்கும்

(2) விளம்பரத் தாளுடன் மார்ச் 10ஆம் தேதிக்குள் நிறுவனத்தில் பதிவு செய்வோருக்கு

(3) மார்ச் 10ஆம் தேதிக்குள் நிறுவனத்தில் பதிவு செய்வோருக்கு

(4) விளம்பரத் தாளுடன் மார்ச் 10ஆம் தேதிக்குள் நிறுவனத்தில் பணம் செலுத்துவோருக்கு

( )

ஃஃஃ முற்றும் ஃஃஃ



www.testpapersfree.com

**C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்**

பின்வரும் பகுதியில் Q24 முதல் Q 28 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக் குறிக்குள் எழுது. (10 மதிப்பெண்கள்)

Q24. தம்பி ஆசையாக ஒரு கிளியை வளர்த்து வந்தான். அது நேற்று கூண்டிலிருந்து ________ போனது. Q24. ( )

Q25. தோட்டத்தில் பலவகை பூக்கள் பூத்திருந்தன. அவை நல்ல ________ பரப்பின. Q25. ( )

Q26. விமான நிறுவனங்கள் அதிக ________ மூட்டத்தினால் பயணத்தை ரத்துச் செய்தன. அதனால், சுற்றுப்பயணிகள் வீடு திரும்ப முடியாமல் அவதியுற்றனர். Q26. ( )

Q27. அழகன் பந்து விளையாடிக்கொண்டிருந்தான். ஆசிரியரைக் கண்டதும் அவன் மரத்தின் பின்னால் ________ கொண்டான். Q27. ( )

Q28. மாணவர்கள் தங்கள் புத்தகங்களைக் காணாது தேடிக்கொண்டிருந்தார்கள். யாரோ அறையின் ________ இருக்கும் பேழையில் அவற்றை வைத்திருந்தனர். Q28. ( )

| | |
|---|---|
| (1) ஒழிந்து | (2) முளையில் |
| (3) பரந்து | (4) பனி |
| (5) முலையில் | (6) ஒளிந்து |
| (7) பறந்து | (8) மனம் |
| (9) மணம் | (10) பணி |



78

www.testpapersfree.com

**D7 முன்னுணர்வுக் கருத்தறிதல்**

பின்வரும் பகுதியில் 29 முதல் 35 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து ***ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து*** அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது. (14 மதிப்பெண்கள்)

| | |
|---|---|
| ஒரு சமயம் பலத்த மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்து. எங்கும் வெள்ளம் பெருகியிருந்தது. பலர் நீரில் அடித்துச் செல்லப்பட்டனர். அந்தச் சமயம் மக்களைக் காப்பாற்ற ஒரு படகு அனுப்பப்பட்டது. மக்கள் தாம் உயிர் தப்பினால் ___(Q29)___ தம் பொருள்களை எல்லாம் விட்டுவிட்டு படகில் ஏறினர். | Q29.( ) |
| பண ஆசையுள்ள ஒருவன், வெள்ளம் ___(Q30)___ வருவதைக் கண்டதும், முதலில் தன் பணத்தையெல்லாம் துணியில் கட்டித் தன் இடுப்பில் கெட்டியாகக் கட்டிக் கொண்டான். பின் அவனும் படகில் ஏறினான். | Q30.( ) |
| நீரில் சென்றுகொண்டிருந்தபோது சூறாவளிக்காற்று வீசவே படகு ___(Q31)___. நீச்சல் தெரியாதவர்கள் நீருக்குள் மூழ்கிவிட்டனர். நீச்சல் தெரிந்தவர்கள் கரையை நோக்கி நீச்சலடித்துக்கொண்டிருந்தனர். | Q31.( ) |
| பண ஆசையுள்ளவன் ____(Q32)___ என்று பெயர் பெற்றவன். இருப்பினும் அவன் இடுப்பில் கனம் இருந்ததால் வேகமாக நீந்த முடியாமல் ____(Q33)___. அருகில் இருந்தவர்கள், "இடுப்பிலுள்ளதை ____(Q34)___, உயிர் தப்பலாம்," என்று கத்தினர். ஆனால், அவன் பணத்தை ____(Q35)___ சிறிதும் விரும்பவில்லை. இடுப்பில் கனம் அதிகமாகவே நீந்த முடியாமல் கஷ்டப்பட்டு, கடைசியில் நீருக்குள் மூழ்கினான். ஆபத்தில் பணம் அவனைக் காப்பாற்றவில்லை. அதுவே அவன் உயிருக்கு எமனாக அமைந்தது. | Q32.( )<br>Q33.( )<br>Q34.( )<br>Q35.( ) |

| | | |
|---|---|---|
| (1) அவிழ்த்துவிடு | (2) நல்லது | (3) தத்தளித்தது |
| (4) கவிழ்ந்துவிட்டது | (5) திணறினான் | (6) நிறைந்து |
| (7) நீச்சல் வீரன் | (8) துன்பப்பட்டான் | (9) திரண்டு |
| (10) கெட்டிக்காரன் | (11) போதுமென்று | (12) இழக்க |



79

www.testpapersfree.com

**D8 சுயவிடைக் கருத்தறிதல்**

பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.

ஈசாப்பின் முதலாளி ஒரு சமயம் வியாபாரத்திற்காக வெளியூர் போக நினைத்தார். அவர் தம் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு பிரயாணத்திற்காக மாட்டு வண்டிகளைப் பூட்டித் தயார் பண்ணச் சொன்னார். அதோடு தன்னோடு செல்ல மூன்று பேர்களும், அவர்களுக்குத் தேவையான உணவையும் உடைமைகளையும் தயாராக எடுத்து வைத்திருக்குமாறு உத்தரவிட்டார்.

முதலாளி தம்மோடு ஈசாப்பையும் வரச் சொல்லியிருந்தார். எல்லாரும் பிரயாணத்திற்கான ஏற்பாடுகளைச் செய்தவாறு இருந்தனர். ஈசாப் உடல் பலம் குன்றியவன். அவன் மற்ற வேலைக்காரர்களிடம் தனக்குச் சுமை இல்லாத சாமானைக் கொடுக்கும்படிக் கேட்டான். அவர்களும் அவன்மீது இரக்கப்பட்டு அவன் விருப்பம்போலவே செய்தனர்.

அவர்கள் புறப்படும் சமயம் ஈசாப் சோற்று மூட்டையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான். அம்மூட்டை இரண்டு ஆள் சுமை இருந்தது. அவன் செயலைக் கண்ட மற்றவர்கள், "பாவம், சுமை இல்லாததைக் கேட்டுவிட்டு அதிக சுமையானதைத் தூக்குகிறானே," என்று கூறி ஏளனமாகச் சிரித்தனர்.

அவர்கள் அடுத்த நாள் அதிகாலையில் பிரயாணத்தைத் தொடங்கினார்கள். ஈசாப்பும் மற்றவர்களும் சுமைகளைத் தூக்கிக்கொண்டு தள்ளாடியபடி சென்றனர். சிறிது நேரப் பயணத்திற்குப் பிறகு எல்லாரும் களைப்படைந்தனர். நண்பகல் நேரமானதால் அவர்கள் சற்று நேரம் ஓரிடத்தில் அமர்ந்து ஓய்வெடுத்தனர். அனைவருக்கும் பசியாக இருந்ததால் கட்டுச்சோற்றைப் பிரித்து, பங்கிட்டுச் சாப்பிட்டனர். இப்போது தூக்கிவந்த கட்டுச் சோற்றில் பாதி குறைந்துவிட்டது.

சிறிது நேரம் இளைப்பாறிய பிறகு அவர்கள் மீண்டும் புறப்பட்டனர். அன்றிரவு மீதி இருந்த உணவையும் அவர்கள் சாப்பிட்டு முடித்தனர். அதன் பிறகு ஈசாப்புக்கு எந்தச் சுமையும் இல்லை. மற்றவர்கள் சுமையுடன் செல்ல அவன் தன் கைகளை வீசிக்கொண்டு ஒய்யாரமாக நடந்தான். ஆரம்பத்தில் ஏளனமாகச் சிரித்தவர்கள் இப்போது ஈசாப்பின் சாதுர்ய புத்தியைப் பாராட்டினர்.



80

www.testpapersfree.com

36 முதல் 41 வரையுள்ள வினாக்களுக்கு மேகண்ட பகுதியிலிருந்து விடைகளைக் கண்டறிந்து எழுது. (20 ம.)

36. ஈசாப்பின் முதலாளி தன் வேலைக்காரர்களுக்கு இட்ட கட்டளை என்ன? ( 4 ம)

________________________________________

________________________________________

________________________________________

37) ஈசாப் வேலைக்காரர்களிடம் என்ன செய்யுமாறு கேட்டுக் கொண்டார்? ( 3 ம.)

________________________________________

________________________________________

________________________________________

38) வேலைக்காரன் எதனால் ஈசாப்பின் விருப்பம் போல் செய்தனர்? ( 3 ம.)

________________________________________

________________________________________

________________________________________

81

www.testpapersfree.com

39. வேலைக்காரர்கள் ஏன் ஈசாப்பைப் பார்த்து ஏளனமாகச் சிரித்தனர்? ( 4 ம.)

40. ஈசாப்பின் சுமை எப்போது பாதி குறைந்தது? (3 ம)

41. ஈசாப் இறுதியில் எவ்வாறு பிரயாணம் செய்தார்? (3 ம .)

82

CA 1

P -5 தேர்வுத்தாள்- 5

கூண்டுக்குள் அடைப்பட்டு ...

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1)3 | 2) 3 | 3) 1 | 4)4 | 5) 2 | 6) 1 | |
| 7) 2 | 8) 4 | 9) 3 | 10) 1 | 11) 3 | 12) 2 | |
| 13)3 | 14) 2 | 15)4 | 16) 3 | 17) 1 | 18) 2 | |
| 19) 3 | 20) 1 | 21) 3 | 22) 2 | 23) 4 | 24) 7 | |
| 25) 9 | 26) 4 | 27) 6 | 28) 5 | 29) 11 | | 30) 9 |
| 31) 4 | 32) 7 | 33) 5 | 34) 1 | 35)12 | | |

36) ஈசாப்பின் முதலாளி தன் வேலைக்காரர்களைக் கூப்பிட்டு வெளியூர் பிரயாணத்திற்காக மாட்டு வண்டிகளைப் பூட்டித் தயார் பண்ணச் சொன்னார். மேலும் தன்னோடு செல்ல மூன்று பேர்களும், அவர்களுக்குத் தேவையான உணவையும் உடைமைகளையும் தயாராக எடுத்து வைக்குமாறு கட்டளையிட்டார்.

37)ஈசாப் தான் உடல் பலம் குன்றியவன் என்றும் தனக்குச் சுமை இல்லாத சாமான்களைக் கொடுக்கும்படியும் வேலைக்காரர்களிடம் கேட்டுக் கொண்டான்.

38)வேலைக்காரர்கள் ஈசாப்பின் மீது இரக்கப்பட்டதால் அவன் விருப்பம் போல் செய்தனர்.

39)அவர்கள் புறப்படும் சமயம் ஈசாப் சோற்று மூட்டையைத் தூக்கிக்கொண்டு கிளம்பினான்.அந்த மூட்டை இரண்டு ஆள் சுமை இருந்தது. அதிக சுமை இல்லாத மூட்டையைக் கேட்டு விட்டு அதிக சுமையானததைத் தூக்கியதைப் பார்த்து வேலைக்காரர்கள் ஏளனமாகச் சிரித்தனர்.

40) அனைவரும் பசியாக இருந்ததால் கட்டுச் சோற்றைப் பிரித்து பங்கிட்டுச் சாப்பிட்டனர்.அப்போது ஈசாப்பின் சுமை பாதி குறைந்தது.

41) ஈசாப்பிற்கு எந்தச் சுமையும் இல்லை. மற்றவர்கள் சுமையுடன் செல்ல ஈசாப் கைகளை வீசிக் கொண்டு ஒய்யாரமாக நடந்தான்.

83

PRIMARY SCHOOL
SEMESTRAL ASSESSMENT 1
PRIMARY 5
TAMIL PAPER 2

BOOKLET A

Name : ______________________ (        )

Class : Primary 5 ____________

Date :

Total Time for Booklets A and B: 1hour 40 minutes

**INSTRUCTIONS TO CANDIDATES**

1. Do not turn over this page until you are told to do so.
2. Follow all instructions carefully.
3. Answer all questions.
4. Shade your answers in the Optical Answer Sheet (OAS) provided.

84

www.testpapersfree.com